# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஜனகரலிய கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்)

**ஜனகரலிய கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி அவர்களால் 2016, யூன் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, மே மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ ***111 ஆம் சட்டமூலம்*** ]


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 8.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

2-PL 009988 - 225 (2016/06)

## ஜனகரலிய கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

“ஜனகரலிய கலாச்சார மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், காரியங் களையும் பயனுற நிறைவேற்றியும் கொண்டுநடாத்தும் நோக்கத் துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஜனகரலிய கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*ஜனகரலிய கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஜனகரலிய கலாச்சார மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “ஜனகரலிய கலாச்சார மன்றம்” என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங் களிலும் அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

2-PL 009887-300 (2016/04)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌதீக அபிவிருத்திக்கு சமனான அபிவிருத்தி அடையவேண்டிய கலாசார மற்றும் ஆன்மீக அபிவிருத்தியின் பெறுமதி, நாடகம், நாட்டிய நடனங்கள் மற்றும் ஏனைய கலைகளை மனித மேம்பாட்டிற்காகவென கருதுவதின் பெறுமதி, அதன்மூலம் தொடர்பாடல், உறுதிமிக்க சமூகமொன்றை கட்டியெழுப்புதல் ;

(ஆ) இனம், சமூகம், கலாசாரம், அரசியல் பேதங்களை கடந்து நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்காகவும் நாடகங்களை அரங்கேற்றல், பங்கேற்றல் போன்றவற்றிற்கான வாய்ப்பினை விஸ்தரித்தல், பல்வேறு உத்திகளை மேற்கொண்டு அவர்களை நாடகம் மற்றும் பிற கலைகளோடு உறவுகொள்வதற்கான உந்துதலாக இருத்தல் ;

(இ) அதிகமான மக்களின் உளத்திடத்தை மேம்படுத்துவதோடு, கருத்துச் சுதந்திரம், மனித தொடர்புகளை பேணுதல், புரிந்துகொள்ளல், பொறுமை, பாராட்டுதல், உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பல்வகைத்தன்மையை புரிந்துகொள்ளல் போன்ற மனித குணங்களுக்கான பெறுபேற்றினை பெற்றுக்கொள்வதற்கு ஒற்றுமையானதும், சமாதானத்துடனும் வாழக்கூடிய சமூகத்தை உருவாக்குதல் அவசியம். அதற்காக நாடகம் மற்றும் அரங்கியல் மற்றும் ஏனைய கலைகளை பயன்படுத்தலும் உறுதுணையாக இருத்தலும் ;

(ஈ) இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு இயற்கையை புரிந்துகொள்ள வேண்டும். அதற்காக, இயற்கையோடு நல்லுறவை பேணும் சமூகத்தை உருவாக்குதல் ;

(உ) நாடகத்தையும் அதன் உபகலைகளையும் பாடமாக பயில்வதற்காக இக்கலைகள் தொடர்பான நூல்கள், கையேடுகள், அரங்கக் குறிப்பேடுகள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், வாரஇதழ்கள், செய்தி அறிக்கைகள், விமர்சனங்கள், கட்புல, செவிப்புல விவரணங்களை தயார்செய்தல், அச்சிடல், வெளியிடல், தொகுத்தல் மற்றும் பதிவேற்றல் என்பனவற்றின் ஊடாக இதுதொடர்பான தகவல்களையும் அறிவினையும் பரவவிடல், இதன் தேவை கருதி செவி, கட்புல ஊடகங்களை பயன் படுத்திக்கொள்ளல் ;

(ஊ) இலங்கையின் எப்பாகத்திலும், வெளிநாடுகளிலும் நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பான பட்டறைகள், மாநாடுகள், கலந்துரையாடல்கள், குழு ஆய்வு மற்றும் பொதுவான செயலமர்வுகள் நடாத்துதல் அல்லது அவற்றிற்கான அனுசரணை வழங்கல் ;

(எ) மன்றத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற் காக நபர்களுக்கும் சமூக அமைப்புகளுக்கும் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் ஒத்துழைப்பு நல்குதல் அல்லது இணைந்து செயற்படல் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக் கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஐந்து பேரைக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப் போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபை யானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாகசபையின் உறுப்பினர்களையும் கொண் டிருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர் இறப்பினால், பதவிவிலகலால் முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானா லொழிய தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டு காலப் பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர் முன்ன தாகவே தமது பதவி விலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தெரிவு செய்யப்படும் புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் முன்னர் பதவிவகித்தவரின் எஞ்சிய காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

□**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்க வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத் தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும், வேலையீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

*(அ)* உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும் :

*(ஆ)* கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

*(இ)* கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்து வங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

*(ஈ)* பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ;

*(உ)* பணிப்பாளர்கள் சபையைத் தெரிவுசெய்தல் ; அத்துடன்

*(ஊ)* கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும்.

*(2)* கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக் கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத் தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாக உள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கினால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப் படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது : ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும்

அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவன மானது கலைக்கப்படும்பட்சத்தில் அல்லது அதற்குமுன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத் தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏணையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*